# ஒளிந்த பூ

அடிக்கடி கண் கலங்கினாள் லலிதா.

வாடிய மலராகச் சில சமயம் முகம் கன்றிக் கிடக்கும். ரோஜா மொட்டுப்போல மூக்குச் சிவந்திருக்கும். அல்லது அலர்ந்த மலரில் பனித்துளி படர்ந்தாற்போல் கண்களிலே நீர் ஒளிரும். இப்படிப் பலவிதம் பல சமயங்களில் தென்பட்ட மனைவியின் மென்மையான அழகினைக் கூட சேஷகிரி ரசிக்கவில்லை.

லலிதாவுக்குத் தாங்கவில்லை, சாடை மாடையாகச் சொன்னாள். பொடி வைத்துப் பேசினாள். குறை கூறினாள். அதனால் சேஷகிரியும் வெகுண்டான். செடியிலே மலர் இருக்கிறதென்பதைப் பார்க்காமல், முள் இருக்கிறதே என்று துடித்துப் பூங்கொடியை முறித்துப் போடுகிற மாதிரிப் பேசினான். "நன்றாகச் சந்தேகப்படு! பட்டுக்கொண்டே இரு! எனக்கும் நல்லதாச்சு!" என்றுதான் கத்தினான்.

அவளுடைய சந்தேகப் போக்கினாலே கணவனுக்கு நன்மையா? என்ன நன்மை? லலிதா யோசித்தாள். யோசித்த பிறகு, ஓர் இன்பப் புன்னகை பூத்தாள். நெருங்கவும் விடாமல் விலகவும் மனங்கொடாமல் மனைவியை இழுத்துப் பிடிக்கும் சூட்சுமம்தான் இது! வேறென்ன?

லலிதா தென்புகொண்டாள். சிரித்துக்கொண்டாள் இன்பமாக. சவலைக் குழந்தையைப் பார்க்கும் அன்னை போலப் பார்த்தாள் கணவனை. பலநாற் உருப்போட்ட நெஞ்சுரத்துடன் ஒருநாள் அணுகிப் போனாள். ஆனால், ஊட்டமும் உரமும் புல்லுருவிக்கே அதிகம் சார்ந்தன. ஏனென்றால் சேஷகிரி அப்படியிருந்தான். "குழந்தைகளையே கவனி! அதைவிட வேறு வேலை என்ன ஒரு தாயாருக்கு?" என்று கேட்டான்.

"சில சமயம் குழந்தைகளைக் கவனிக்கும்போது உங்கள் சௌகரியங்களைப் பார்க்க முடிகிறதில்லை," என்று லலிதா மன்னிப்புக் கேட்பது போல மொழிந்தபோது, சேஷகிரி இடக்குடன்; "என்னைக் கவனிக்கணும் என்று நான் அழவில்லை!" என்றான்.

"மனத்தில் நினைத்துக் கொள்ளுகிறீர்களோ என்னமோ!" என்று லலிதா சொன்னதும், வேஷகிரி, "என்ன பேச்சு இது? போய்க் குழந்தையைப் பார். இல்லாவிட்டால் தூங்கு" என்றான் விட்டேற்றித்தனமாக.

சாளரத்தின் வழியாக வந்த நிலா ஒளியில் குளுமையும் இன்பமும் மண்டிக் கிடந்தன. அந்த நேரத்தில் இன்னும் சற்றுப்பொழுது கணவனுடன் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்று லலிதாவுக்கு ஆசை அடித்துக்கொண்டது. ஆனால், தொட்டிலில் அமைதியாகத் துயிலும் மதலையைச் சாக்கிட்டுக் கணவன் 'போயேன்' என்று சொல்லும் போது அவள் என்ன செய்வாள்?

சேஷகிரி மாறிவிட்டான். முன்போல உல்லாசமில்லை. அன்பு நோக்கு இல்லை ஆசைக்குரிய மனைவி என்ற எண்ணமே வழிந்துபோயிற்று. இவள் தாய் என்ற நினைவு மட்டும் தொக்கியிருக்கிறதே. அது மட்டும் நிலையா? வேர்ப்புறத்திலேயே ஊறு என்றால், மேற்புறம் காயும் கனியும் மலரும் எத்தனை நாள் நிலைக்கும்?

இரண்டாம் குழந்தையின் பேறு காலத்தில் எத்தனையோ அமர்க்களமாக லலிதாவின் வசதிகளைக் கவனித்தான் சேஷகிரி. பிறந்தகம் போகவேண்டாம் என்று சொல்லி, அவளைத் தன்னிடமே இருத்திக்கொண்டு அன்பும் ஆதரவும் கூட பணத்திற்கு மேலாக இருக்கும்படி வாரி வழங்கினான்; பொறுப்பு ஏற்றான். செலவும் பண்ணினான் சந்தோஷமாக. பெருமை பொங்க நடையாய் நடந்தான் வீட்டுக்கும் வைத்தியசாலைக்குமாக. அப்படிப்பட்ட புருஷன், லலிதா பெற்றுப் பிழைத்து இரண்டு மாதங்கூட முடிய முடியவில்லை, மாறிவிட்டான். லலிதாவுக்கு எப்படி தூக்கம் வரும்? துக்கம்தான் வந்தது.

ஓசைப்படாமல் எழுந்தாள். டார்ச்சு விளக்குப் போட்டு, தூங்கும் கணவனை உற்றுக் கவனித்தாள். அந்த அமைதியான முகத்திலே, கம்பீரமான தோற்றத்திலே, ஒரு மூடுமந்திரமான உள்ளம் அடங்கியிருக்கிறது! அந்தரங்கத்திலே என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்?

முகத்தின்மீது நீடித்துப் படிந்த விளக்கொளியினாலேதான் போலிருக்கிறது, சேஷகிரி விழித்துக் கொண்டான். மலர விழிக்காமல் புருவம் சுருக்கிக் கடுமை தெறிக்கப் பார்த்தான். "என்ன, லலிதே! ஏன் தூங்கவில்லை? பச்சை உடம்பு; இப்படியிருந்தால் என்னத்திற்காகும்? குழந்தையைத்தான் கஷ்டப்படுத்தப் போகிறாய் நீ" என்றான்.

"ஐயோப்பா! என்ன அக்கறை!"

"உனக்கு இல்லாத அக்கறை எனக்கு அவசியமில்லைதான்! சேச்சே! காசைக் கொடுத்து தேளைக் கொட்டச் சொன்ன மாதிரியாச்சு!" என்று அலுத்துப் பேசிவிட்டுப் போர்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டு திரும்பிப் படுத்துவிட்டான் சேஷகிரி.

"எனக்கும் அப்படித்தானிருக்கிறது! கொஞ்சநாள் நிம்மதியாய் அப்பா, அம்மாவுக்குப் பெண்ணாய்ச் சீராடி வந்திருக்கலாம். அதுவும் போச்சு. இங்கேயும் இப்படிப் பேச்சுக் கேட்டாகிறது!" என்று பொருமிவிட்டு, குன்றிப்போன பெண்மையுடன் பின்வாங்கி, லலிதா, படுத்திருக்கும் குழந்தைகள் இருவருக்கும் நடுவில் போய் உடலைச் சாய்த்தாள்.

தூங்க முயன்றாள். அவளுடைய வேதனை தூங்கும் குழந்தைகளுக்கும் தெரியவில்லை; தூங்காத கணவனுக்கும் தெரியவில்லை. கடைசியில் கடந்து போன நாளின் இனிமையை நினைவுபடுத்திக்கொண்டு சுவைத்தாள். முதல் குழந்தையைப் பிறந்தகத்தில் பெற்றெடுத்துக்கொண்டு. ஆறாவது மாசம் கணவனிடம் வந்தாளே. அப்போது? பிரிவுக்கெல்லாம் ஈடுகட்டிப் பரிவும் அன்பும் பொழிந்தான் கணவன். பிரிவே வேண்டாம் என்று தடுத்து நிறுத்தினான். ஆனால், இப்போது?

'எத்தனை யோகம் லலிதாவுக்கு?' என்று ஆச்சரியப்பட்டாளே அந்த ஜானகியின் நிலையே எவ்வளவோ மேல். நான்காம் பிள்ளைப்பேறுக்குக்கூட பிறந்தகம் போய் வந்தவள் ஜானகி. ஆனால், அவள் பாக்கியசாலி. முதல் குழந்தையைப் பெற்று வந்தபோது கிடைத்த வரவேற்புக் கூட மட்டந்தான் என்று தோன்றும்படி, நான்காவது தடவை வரவேற்பு பெற்றாள். மனைவியின் தேவை, இல்லத் தலைவியின் வருகை, தானாக நாளாகத்தான் புருஷனுக்குத் தெரிகிறது. இந்தப் பாக்கியத்திற்கு இடம் வைத்துக் கொள்ளவில்லையே இந்த லலிதை!

லலிதையின் பெருமூச்சை கேட்டாள் ஜானகி. 'பிறந்தகம் போய் வருகிற பெண்டாட்டியிடம் பிரியம்' என்று ஒரு நாள் லலிதா சொன்னபோது, அந்தப் பேச்சு, தன்னுடைய புதுப் பட்டுப்புடவையைக் கண்டு எழுந்த கிண்டல் என்று ஜானகி நினைத்தாள். ஆனால், பிரிதொரு நாள் லலிதை சற்றுக்காரமாகவே, "பிறந்தகம் நமக்கு ஒரு மாறுதலுக்காகத்தான் இருக்கிறது. புருஷனுக்கு அதனால் ஆறுதலாகத்தானிருக்கிறது. நான் பிரசவத்திற்கு இங்கேயே இருந்தது முட்டாள்தனம்," என்று நொந்தாள். கண்களில் நீர்கூட ததும்பிவிட்டது; அதற்கும் யோசிக்கவில்லை ஜானகி.

பிறகுதான் ஒருநாள் லலிதாவின் மனச்சுமை அவளுக்குத் தெரிந்தது. லலிதாவின் வீட்டில் தென்பட்ட மாறுதலைக் கண்டதும், அரைகுறைச் சிரிப்புடன், "என்ன இப்படி ஏற்பாடு?" என்று ஜானகி கேட்டாள். லலிதாவின் முகம் ஒரு தினுசாகிவிட்டது. அருகருகு உறவாடிக் கொண்டிருந்த கட்டில்கள் இரண்டும் பிரிந்து தனித்தனி அறையில் இடம் பெற்றிருந்தன. "அண்ணன் தங்கை மாதிரி இருக்கப் போகிறீர்களாக்கும்! குடும்பப் பாரம் பெருகிவிடாமல் இருக்க இந்த ஏற்பாடா?" என்று கேட்டுவிட்டாள் ஜானகி.

"அப்போ எனக்கொரு மதனி வராமலிருக்க வேணும்!" என்று பதில் இளித்தாள் லலிதா. ஜானகி வாயை முடிக்கொண்டாள்.

லலிதாவின் இல்லற வாழ்வில் பிளவு ஏற்படுகிறதோ? இந்தப் பிளவு பெருகிவிடாமலிருக்க வேண்டுமே! லலிதாவின் பீதி ஆதாரமற்றதோ! ஆனால், அதை எப்படிச் சொல்ல முடியும்? பெண்கள் பலர் படிக்கும் கல்லூரியில் பேராசிரியராக வேலை பார்க்கிறான் சேஷகிரி. இளம் பெண்களுடன் பேசிப் பழகும் வாய்ப்பு நிறைய இருக்கிறது.

நாலு இடங்களில் போய்ப் பழகிவர வேண்டியவன் புருஷன். அவனைப்பற்றிச் சந்தேகப்பட ஆரம்பித்தால் ஒரு மனைவிக்கு ஏது சாந்தி? இதை பக்குவமாகச் சொல்லி லலிதாவுக்கு மனத் தெளிவு கொடுக்க விரும்பினாள் ஜானகி. ஒரு நாள் லலிதாவும், சேஷகிரியும் குழந்தைகளை அழைத்துக்கொண்டு ஒரு சினிமாக் காட்சிக்குச் செல்லும்போது பார்த்தாள். உடனே ஜானகியின் மனசு தெளிந்துவிட்டது.

கணவன் மனைவியிடையே நிலவும் அன்பும் பாசமும் அப்படியெல்லாம் எளிதில் முறித்துவிடக் கூடியதா? அவள் பயந்தது வீண்!

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு ஜானகி லலிதாவைப் பார்க்கப் போனாள். போன இடத்தில் ரொம்பக் கலங்கிவிட்டாள். ஏனென்றால், லலிதா அலங்கமலங்க விளங்கினாள். "இதென்ன மூட்டை முடிச்சு? எங்கே பயணம்?" என்று கேட்டாள் ஜானகி.

"போக்கிடம் எங்கே! பிறந்தகத்திற்குத்தான் போகிறேன். இவருக்கு என் தொல்லை இல்லாமல் இருக்க வேண்டாமா? அதற்காகத்தான். போ போ என்று விரட்டின அப்புறம்கூட எனக்கு ரோசமில்லையா, என்ன? போகவேண்டிய சமயத்தில் போகவில்லை; அனுப்பவில்லை. இப்போது விரட்டுகிறார். கைப் பொம்மையாகி ஆடவேண்டிய ஜன்மம்தானே!" என்று லலிதா குமுறினாள். கண்ணீர் சிந்தினாள்.

ஜானகி யோசனை செய்யவில்லை. "அப்படியெல்லாம் பேசாதே! நீ அப்பப்போ என்னிடம் சொல்லி வருத்தப்பட்டுப் பிறந்தகம் போகவில்லையென்று குறைப்பட்டாயோன்னோ? அது அவருக்கும் உறுத்தியிருக்கும். அருமை பெருமையாக அவர் கவனித்துச் செய்ததை எடுத்துக்கொள்ளவில்லையே என்று நினைத்திருப்பார். இப்போ போகச் சொல்லுகிறாராக்கும். இந்தப் புதுக் குழந்தையைக் காட்டிவிட்டு வரவேண்டாமா நீ? போய்வாயேன்!" என்று கனிமொழி புகன்றாள்.

கண்களைத் துடைத்துக்கொண்டாளே தவிர, லலிதாவுக்கு மனத்திலே வேதனை குறையவில்லை.

"இரண்டு மாசமாகுமா வருகிறதற்கு?" என்று வினவினாள் ஜானகி. "ஆகும்; மூணு நாலுமாசமாவது இருந்துவிட்டுத்தான் வரணும்" என்று பதிலளித்தாள் லலிதா. 'என் அருமை தெரிந்து திண்டாடட்டும்' என்ற தொனி, பூவில் தேன்போன்று, இயற்கைதானே ஒரு மனையாளுக்கு!

மனைவியை ஊருக்கு அனுப்பின பிறகு சேஷகிரி எப்படி இருக்கிறான்? இதைக் கவனிக்க ஜானகி விரும்பினாள். அவளோ பெண். எப்படிக் கவனிக்க முடியும்? மெல்ல தன் கணவனிடம் சொன்னாள். அவன் முதலில் மறுத்தான். "நல்ல வேலைதான் கொடுக்கிறாய் எனக்கு?" என்று சிரித்தான்.

"ஏன், தப்பா? உங்களுக்கு அவருடன் பழக்கம் குறைவாயினும், எனக்கு லலிதா நல்ல சிநேகிதி. எப்படியிருந்தாலும் ஒரு புருஷன், பெண்டாட்டிக்கு நன்மை செய்யும் முயற்சி தவறாகுமா?" என்று கேட்டு இணங்க வைத்தாள்.

அப்புறம் ரொம்ப நாள் வரை ஜானகியும் கணவனைக் கேட்கவில்லை. அவனும் ஒன்றும் தெரிவிக்கவில்லை. லலிதாவுக்கு ஜானகி கடிதங்கள் எழுதினாள். ஒரு கடிதம் மறுமொழி கொணர்ந்தது. மற்றக் கடிதங்கள் வேர் கொள்ளாத குருத்துச் செடி போலப் பயனற்றுப் போயின.

ஒருநாள் ஜானகிக்குச் செய்தி கொணர்ந்தான் அவள் கணவன். "சேஷகிரியும் போயிருக்கிறாராம். ஒரு மாதம் லீவு எடுத்திருக்கிறாராம்," என்று தெரிவித்தான்.

"அவளை அழைத்துக்கொண்டு வரத்தான்" என்று முறுவலித்தாள் ஜானகி. லலிதா போய் மாதம் இரண்டு முடியவில்லை என்பதனால் முறுவல்!

அடுத்த மாதம், "சேஷகிரி வந்துவிட்டார். பார்த்தேன். கல்லூரி ரஸ்தாவில்" என்றான் ஜானகிநாதன்.

அன்றைக்கே, மாலையில் தன் நான்கு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு போனாள் ஜானகி. வெளி வாசலில் கோலமிட்டிருக்கவில்லை என்பதைக் கவனிக்காமல், "லலிதே!" என்று கூவிக்கொண்டு சமையற்கட்டுக்கே விரைந்தாள். சட்டென்று நின்றுவிட்டாள். பின் வாங்கினாள், இரண்டு தப்படி. அரையில் ஒரு பழைய வேஷ்டியும் திறந்த மார்பும், கலைந்த கேசமுமாக, கையில் ஒரு கற்சட்டியுடன் குமுட்டிக்கு அருகில் காட்சி தந்தான் சேஷகிரி. ஏன் லலிதா இல்லையா?" என்று கேட்டாள் ஜானகி.

கதவின் மேல் கிடந்த ஒரு துண்டை எடுத்துப் பரபரவென்று தோள்மேல் போட்டுக் கொண்டான் சேஷகிரி. "இல்லை; அதனால்தான்......" என்று சிரித்துத் தடுமாறினான்.

"ஏன்? வரவில்லையா உங்களுடன்?"

"இல்லை; வரவில்லை........"

"எப்போ வருவாள்?.........

"வருவாள்........ உடம்பு கொஞ்சம் சரியில்லை........ வருவாள்."

"சரி, நான் வரேன்" என்று கூறிவிட்டுச் ஜானகி சரேலெனக் கிளம்பி வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். லலிதா வந்திருப்பாள் என்ற நம்பிக்கையுடன் தன் குழந்தைப் பட்டாளத்துடன் போய் நின்றதை எண்ணி ஒரு புறம் வெட்கம். கற்சட்டியும் தானுமாக அசட்டுச் சிரிப்புடன் சேஷகிரி அவதிப்பட்ட சமயம், அவருக்கும் தர்ம சங்கடம் உண்டாகிவிட்டது என்று சிரிப்பு ஒரு புறம்.

இவ்வளவுக்கும் நடுவில், சேஷகிரியைப் பார்த்தால், லலிதா பயப்படும்படியாகத்தான் இருக்கிறது.

இலையுதிர்த்த காலத்திலே மரம் செடிகளின் கப்புகளில் தளிர் தளிர்க்கும் வேகம்போல மாதங்கள் மளமளவென்று கடந்துவிட்டன. லலிதா வரவில்லை. ஏன் வரவில்லை? ஊரிலிருந்த சொற்பத் தமிழருக்குள்ளே இதுதான் பேச்சு. ஒரு பிறந்த நாள் விருந்து, ஒரு சீமந்தச் சடங்கு. ஒரு பாட்டுக்கச்சேரி என்று எந்தச் சந்தர்ப்பம் வந்தாலும், அனைவரும் சந்தித்துக் கொண்டதனால் 'லலிதா இன்னும் வரவில்லை' என்ற அம்சம் உச்சாணிக் கிளையில் சிக்கிக் கொண்ட காற்றாடி போலத் தெரிந்தது.

பிள்ளைப் பேற்றுக்கு மனைவியை அனுப்பாமல் வைத்துக்கொண்டதற்குக் காரணம், சேஷகிரிக்கு வேட்டகத்தாருடன் ஏதோ மனஸ்தாபம்தான். ஆனால், லலிதாவுக்குப் பிறந்த வீட்டுப் பாசம். இந்த முரண்பட்ட நிலைமையின் விளைவுதான் நீண்டகாலப் பிரிவை உண்டாக்கிவிட்டது. நிரந்தரப் பிரிவாகவும் மாறிவிடக்கூடுமோ? இதுதான் காற்றாடியைக் கண்டவர்களின் கண்களுக்குப் புலப்பட நூலிழை.

சேஷகிரியின் அன்பிலே குறைகண்ட ஏமாற்றம்தான், லலிதாவின் பிறந்தக நாட்டத்திற்குக் காரணம் என்று ஜானகிக்குத் தெரியும். அதை அவள் அப்பட்டமாகச் சொல்லவில்லை. ஆனால் அவள் அறைகுறையாகச் சொன்னதே போதுமான பொறி! தீயை மறைத்த புகையெனப் புகைந்தது.

புகையை விசிறி விட்டாற்போல ஒரு செய்தி வந்தது. 'லலிதா சில மாதங்களாகத் தையல் வேலை செய்துவருகிறாள்! தையல் கூலி போடுகிறாள்!' துண்டுத் துக்குணியான பகுதிகளைப் பொருத்தி, ஊசி நூல் போட்டு இணைத்தாற்போல எல்லாரும் பேசினார்கள். உருவான உடையைக் கண்டு ஜானகி ரொம்ப சரி ஏன்றுதான் என்று தான் நினைக்க வேண்டியதாயிற்று.

ஓரிரண்டு சமயங்களில் சேஷகிரியைக் கண்டபோது, "லலிதா வரவில்லையா? உடம்பு தேவலையா?" என்று ஜானகி கேட்டாள். 'இல்லை' என்று மட்டும் பதில் வந்தது. எனவே, லலிதாவுக்கு ஒரு கடிதம் போட்டாள். பதிலே வரவில்லை ஒருவாரம் காத்திருந்துவிட்டு ஜானகி ஒரு காரியம் செய்தாள். கணவனிடம் சொல்லி, சேஷகிரிக்கு ஒரு கடிதம் கொடுக்கச் சொன்னாள். 'முன்பின் பழக்கமில்லை' என்று கணவன் உதட்டைப் பிதுக்கினதும் தானே எழுதிவிட்டாள். "லலிதா எப்போது வருகிறாள்? சில சாமான்கள் வாங்கிவரச் சொல்லிக் கடிதம் எழுதவேண்டும்? அவளுடைய விலாசம் கொடுங்கள்," என்று எழுதி பெரிய பெண்ணிடம் கொடுத்து அனுப்பினாள்.

சேஷகிரி ஏமாற்றம் கொடுத்தான். "என் நண்பர் ஒருவர் அடுத்த வாரம் வருகிறார். அவருக்கு எழுதினால் வாங்கி வருவார். சாமான்களின் பட்டியல் கொடுத்தால் அவருக்கு அனுப்பி வைப்பேன். லலிதா ஒரு நர்ஸிங் ஹோமில் இருக்கிறாள். அதன் பெயர், நம்பர் தெரியவில்லை எனக்கு. மன்னிக்க வேண்டும்" என்று எழுதிவிட்டான்.

ஜானகிக்கு அழுகையே வந்துவிட்டது.

இன்னும் சில மாதங்கள் ஓடிப்போயின. ஜானகிக்கு லலிதாமேல் கூடக் கொஞ்சம் அதிருப்திதான். என்னதான் பற்றுவிட்டுப் போய் வீறாப்புடன் இருந்தாலும், லலிதாவுக்குப் பெண்மையின் உயர்வு இல்லையே என்று தோன்றிற்று. "அவர் சுகமா?" என ஒரு கோபக் கேள்விக்கூடத் தன்னைக் கேட்கக்கூடாதா?

'தணிந்து வரவேண்டியவள் பெண்தான்,' என்ற முடிவு ஏன் லலிதைக்கு வரவில்லை?

அத்தி பூத்தாற்போல ஒருநாள் சேஷகிரி ஜானகியின் வீட்டிற்கு வந்துவிட்டான். வாசலில் தன் கணவனுடன் சேஷகிரி பேசுவதை நன்றாகக் கவனிக்க முடியவில்லை. சேஷகிரியின் குரல் ரொம்ப அடக்கம். இவர் எப்படி கல்லூரிப் பேராசிரியராய்க் கழிக்கிறார் என்று கூட ஜானகிக்குத் தோன்றியது.

"என் மனைவிக்கு ஒரு சிரமும் இருக்காது," என்று சொல்லிவிட்டு, ஜானகியைத் தேடி வந்தான் அவள் கணவன். "அவருடைய மனைவி வருகிறாராளாம் நாளைக்கு இரவு. சமைத்து அனுப்பமுடியுமா என்று கேட்கிறார்," என்று வந்து சொன்னான்.

"முடியாமல் என்ன? முடியும். இங்கேயே வந்து சாப்பிட்டுவிடலாமே; அனுப்புவானேன்? எடுத்துப் போட்டுக்கொண்டு சிரமப்படுவானேன்!" என்று சேஷகிரியின் காதுபடச் சொன்னாள் ஜானகி.

"இல்லை; ராத்திரி பத்து, பத்தரை வரை நீங்கள் காத்திருக்க வேண்டும். குளிர்நாள், அனுப்பிவிட்டால் நல்லது," என்று சேஷகிரி சொன்னான். ஒப்புக்கொண்டாள் ஜானகி.

சேஷகிரி சென்றபின், என்னவோ ஒரு குருட்டு யோசனை; என் மனைவி' என்று அவர் அடிக்கடி போட்ட ஆங்கிலச் சொல் அவளைப் புன்னகை செய்ய வைத்தது. அப்போது திடீரென்று துள்ளினாள்.

"என்ன? என் 'வொய்ப்' என்றாரே அது லலிதாதானே? வேறு யாராவது புதுப் பெண்டாட்டியோ?" என்று கேட்டாள் ஜானகி!

"அவரையே கேட்கிறதுதானே?" என்ற மறுமொழி கிடைத்தது.

"எனக்கென்னவோ திடீர்னு பயமாயிருக்கே"! என்று ஜானகி கவலைப்பட்டாள்.

"பைத்தியம்! லலிதாவுக்கு நீ தானே 'நல்ல சிநேகிதி' இல்லாவிட்டால் உன்னிடம் வந்து சாப்பாடு கேட்பாரா?"

"அம்மாடி! பிழைத்தேன்!" என்று ஜானகி கைகூப்பினாள், ஆறுதல்மிக்கவளாய்.

வருவாளா வருவாளா என்று காத்திருந்த சிநேகிதைக்காக, ஜானகி அன்பும் கருத்துமாகச் சமைத்தாள். சேஷகிரி அனுப்பிய கிழவன் சாப்பாட்டு அடுக்கைக் கொண்டு போனான். அன்றிரவு லலிதாவின் நினைவுடன் தூங்கினாள்.

பொழுது புலர்ந்தது. இளம் வெயில் தலைகாட்டினது தான் தாமதம். புஷ்பக் காட்சியைத் திறந்து வைக்கப் போகும் தாவர சாஸ்திரி போல உரிமை துலங்கப் புறப்பட்டாள் ஜானகி. 'பகல் சாப்பாடு எங்களகத்திலே!' என்று சொல்வதற்குத்தான்; ஆனால் அந்த அழைப்பில் புதைந்திருந்த கனிவும் அன்பும் சொற்பமா?

அந்த நடுக்கூடத்தில் அன்று பிறந்தகம் போவதற்கு முன்பு மடியில் மதலையும் பக்கலில் குழந்தையுமாகக் காட்சி தந்தாற்போலவே, இன்னும் காட்சியளித்தாள் லலிதா. மாறுதல் இல்லை. ஆனால் ஜானகியைக் கண்டதும் லலிதாவுக்குப் பார்வை மருண்டது. "வாங்கோ, ஜானகி" என்று வரவேற்றபோது அவள் குரலில் சிலிர்ப்பு இருந்தது.

"எங்களை வந்து பார்க்க மனசு வந்ததா, லலிதா?" என்று கேட்டுக்கொண்டே உட்கார்ந்தாள் ஜானகி. "ஏன் கடிதம் போடாமலிருந்தாய்?" என்றும் கேட்டுவிட்டாள். அதைக் கேட்டகாதவரைக்கும் லலிதாவிடம் நெருக்கம் தோன்றாது என்று ஜானகிக்கு அந்தரங்கம் சொல்லிற்று.

"என்னவோ முடியவில்லை, ஜானகி" என்று சிரித்து மழுப்பினாள் லலிதா.

"ஊராருக்கெல்லாம் தையல்மெஷினில் துணி தைத்துக் கொடுத்தாயாமே. அதற்குப் பொழுது இருக்கிறது இல்லையா? அதெல்லாம் வரும்படிக் காரியம். கடிதம் செலவுதானே!" இதைச் சொல்லும்போது ஜானகி சுமூகமாகவே சிரித்தாள்.

ஆனால், லலிதா சிரிக்கவில்லை. "பாரேன், இத்தனை தூரம் பரவிவிட்டது விஷயம்! பிறத்தியார் சுமத்த ஆரம்பித்த தையல் வேலையைத் தாங்க முடியாமல், மட்டுப்படுத்திக் கூலி போட ஆரம்பித்தேன். அது போய் எத்தனை பேரைக் கோப மூட்டிவிட்டது! பொழுது போகணுமே என்று ஆரம்பித்த வேலை......... ஐயோ, கஷ்டம்!" தன் நெற்றியில் லேசாகத் தட்டிக்கொண்டாள் லலிதா.

இப்பொழுதுதான் ஜானகிக்கு லலிதாவின் பரபரப்பு விளங்கியது. வந்ததுமே கோபித்தேனே என்று "நினைத்துவிட்டாயா, என்ன? உன்னைப் பற்றி அத்தனை தூரம் கவலைப்பட்டுப் போனேன் நான்..." என்று சொல்லிக்கொண்டே அவள் லலிதாவைப் பார்த்தாள்.

"லலிதா!" என்று ஜானகி கூவிவிட்டாள். "அம்மா!" என்ற கூப்பாட்டுடன் ஒரு சிறுமி ஓடி வந்தாள்.

பட்டுச் சட்டையும் குட்டிப் பாவாடையும் கையில் சிற்றுண்டிப் பொட்டலமுமாக வந்த சிறுமியைக் கண்ட ஜானகி பிரமித்துவிட்டாள்.

"ஓ, நீங்களா?" என்று விசாரித்த சேஷகிரியைக் கூடக் கவனிக்கவில்லை ஜானகி.

"லலிதா, இந்தக் குழந்தை?" என்று கேட்டாள் ஜானகி

"நாலு மாசமாகிறது" என்று முறுவலித்தாள் அமைதியாக.

"என்ன புத்தி எனக்கு? மடியிலிருக்கிறது புதுக்குழந்தை என்று தெரிந்து கொள்ள எத்தனை நேரம்! என்ன பேர் வைத்திருக்கிறாய்?"

"பேருமில்லை ஒன்னுமில்லை இதற்கு!" என்று சொல்லிக்கொண்டே, லலிதா குனிந்து மகவின் பூங்கன்னத்தில் ஒரு மென் முத்தம் கொடுத்தாள்.

"ஏனாம் அழைக்காதபோதே வந்துவிட்ட குழந்தை என்று, அதற்குப் பேர் சொல்லி அழைக்கக் கூடாதென்று வஞ்சகமா? வாசனைப் பூவை ஒளித்து வைக்க முடியுமா? மணத்துக்கொண்டு வந்துவிட்டது? 'புஷ்பா' என்று கூப்பிடு" என்று ஒரு போடு போட்டாள் ஜானகி. பூத்தாது சிந்தினாற்போல் சிரித்துக்கொண்டு லலிதா, "புஷ்பா!" என்று முறுவலித்தாள் கணவனை நோக்கி.

************

(தினமணி கதிர், ஜூலை 7, 1955)